

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

மூவர் அம்மானை.



சென்னை-ஜூலை.

சங்கநிதிவிளக்க அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

1927.

உ

கடவுள் துணை.

மூவர் அம்மானை.

புந்திவனஞ்சூழும்பொருவில்லாப்பிள்ளை
தந்திமுகன்குடவயிற்றன்சப்பாணியம்மானை
தந்திமுகன்குடவயிற்றன்சப்பாணியம்மானாகில்
இந்தவயிற்றிறக்கமையெனவேயம்மானை
இன்றெனவேற்றயீசனிரக்கலுற்றனம்மானை. 1

தெள்ளுதமிழ்பெருகுந்திருமுட்டத்தேவாங்
உள்ளகிலமெல்லாமுழுதண்டரமம்மானை
உள்ளகிலமெல்லாமுழுதண்டரமாகில்
கள்ளனிவனென்றுகாட்டுவதென்னம்மானை
கட்டாரேபாரிற்கதிரொளித்தாலம்மானை. 2

திரிசிரமாபுரவீசன்செட்டிமகட்காய்வேடம்
தரித்துமருத்துவஞ்செய்தருளுமம்மானை
தரித்துமருத்துவஞ்செய்தருளுமாகில்
மருத்துவனென்னெய்ச்சிக்கைமணிவாக்கேதம்மானை
மட்டேவார்குழலிருக்கமனையரிசேதவமம்மானை. 3

சந்தமும்பூம்பொற்றஞ்சைவரோசாணுசளர்
கந்தனுமாமிதன்னைக்கைபிடித்தாரம்மானை
கந்தனுமாமிதன்னைக்கைபிடித்தாராமாகில்
இந்தவுலகதனிற்சேர்ந்தமோவம்மானை
ஏற்குமென்றேனசயின்மழுவேந்தினாரம்மானை.

விரிந்தபுகழ்ப்புள்ளிருக்கும்வேளூர்வயித்தியனார்
பரிந்துவினைதீர்க்குந்தெய்வப்பண்டிதரானம்மானை
பரிந்துவினைதீர்க்குந்தெய்வப்பண்டிதரேயாமாகில்
மருந்துவில்லைக்கூலிவாங்குவரோவம்மானை
வாயிலமண்போட்டுவாங்குவர்காணம்மானை. 5

புள்ளிருக்கும்வேளூர்ப்புண்ணியனார்பெற்றமுத்து
பிள்ளைதனக்கிந்திரனார்பெண்கொடுத்தாரம்மானை
பிள்ளைதனக்கிந்திரனார்பெண்கொடுத்தாராமாகில்
வள்ளிதனைக்கள்ளவழிநத்துண்டோவம்மானை
வள்ளியம்மையம்மான்மகளல்லவம்மானை. 6

மருப்பாரும்பூஞ்சோலைமலைவாழுங்கோசா
திருப்பாற்கடலுடையசெல்வர்காணம்மானை
திருப்பாற்கடலுடையசெல்வரேயாமாகில்
ஏற்பாற்குப்பெண்கொடுப்பதேச்சலோவம்மானை
எனறலசோமணையுண்டிருந்தார்காணம்மானை.

ஈசன்பசுவாகியேமனிளங்கன்றூதி
வீசுபுகழ ரூரினவீதிவந்தாரம்மானே
வீசுபுகழ ரூரினவீதிவந்தாராமாகில்
காசளவுபாற்றுஞ்சுறந்துமோவம்மானே
கன்றையுதைகாலிமறவாதேயம்மானே. 8

எண்ணரியசச்சிலவாழேகாம்பரநாதர்
அண்ணலெழின்மேனியெல்லாமாகாயமம்மானே
அண்ணலெழினமேனியெல்லாமாகாயமாமாகில்
தண்ணிலாமவன்முடிமேற்சடையனாரம்மானே. 9

ஆரூர்வயல்சூழருணையண்ணாமலைநாதர்
பேரியவவண்ணாப்பெண்கொண்டாரம்மானே
பேரியவண்ணாப்பெண்கொண்டாராமாகில்
தாரணியிலயாவருக்குந்தப்புவரோவம்மானே
தப்புத்துறைபறிந்துதப்புவர்காணம்மானே. 10

அடுத்ததிருக்காவேரியணிபரங்கத்தெம்பெருமானே
எடுத்தபடுக்கையைவிட்டெழுந்திலாகாணம்மானே
எடுத்தபடுக்கையைவிட்டெழுந்திலரோயாமாகில்
படுக்கையிலேவிடந்தீண்டிப்பட்டாரோவம்மானே
பட்டலசேவரவருடப்பருமெடுத்ததம்மானே. 11

பூங்காவனஞ்சூழும்புள்ளிருக்குவேளூரர்
பாங்காவதெவமருந்தைப்பரமன்காணம்மானை
பாங்கானதெல்மருந்தைப்பாமனையேயாமாகில்
தாங்கநிழையெடுத்துத்தைப்பரோவம்மானை
தையலுக்குநல்லசமர்த்தன்காணம்மானை. 12

கள்ளிருக்கும்பூஞ்சோலைக்காளத்தியீச்சுரனார்
வெள்ளரியுங்கைக்கரியுமிரைந்தட்டாரம்மானை
வெள்ளரியுங்கைக்கரியுமிரைக்குநட்டாராமாகில்
புள்ளரியுமங்கேபடவிட்டாரம்மானை
படவிட்டபூசனியும்பூத்ததுகாணம்மானை. 13

சூட்டுபுகழ்த்தென்மதுரைத்தொல்லுலகிற்சொக்கேசர்
காட்டுக்குள்வீற்றிருந்தகாரணங்காணம்மானை
காட்டுக்குள்வீற்றிருந்தகாரணமேயாமாகில்
இருட்டுப்பயங்கள்சற்றுமில்லையோவம்மானை
எட்டானைசூழ்ந்திருந்தானைப்பயமம்மானை. 14

கள்ளிமுஞ்செஞ்சடையார்காளத்தியீச்சுரனார்
வள்ளலார்செஞ்சடைமேல்வாளரவுண்டம்மானை
வள்ளலார்செஞ்சடைமேல்வாளரவுண்டாமாகில்
துள்ளிவருமப்புலியைத்தொடருமோவம்மானை
தொடருமோமயிலாடுந்துறைகண்டாலம்மானை. 15

சோற்றுண்மண்டையிருக்குஞ்சொக்கர்திருக்கூடலிலே
வேற்றாளாய்மண்சுமக்கவேண்டினார்காணம்மானை
வேற்றாளாய்மண்சுமக்கவேண்டுவதேயாமாகில்
மாற்றானடிக்கவழக்குண்டோவம்மானை
வைகையிலேதானடிக்கவழக்குண்டேயம்மானை. 16

ஆறுமுகமாறாறுபாகமெல்லாம்பேருருப்பி
வீறுடையசண்முகர்வேதாந்தியம்மானை
வீறுடையசண்முகனார்வேதாந்தியாமாகில்
மாறுடையவேடவள்ளிமருவநின்றதேனம்மானை
மாறுவென்றசிவபலையின்மறந்திருந்தாரம்மானை. 17

மாலறியாக்கள்ளனிவன்வக்குமன்றிலேபுகுந்து
கோலமுடனெடுத்துக்கொண்டொளித்தாரம்மானை
கோலமுடனெடுத்துக்கொண்டொளித்தாராமாகில்
காற்கடகமென்றுபுகன்றதுண்டோவம்மானை
கண்டல்லோவிருக்குமுருக்குத்திட்டதம்மானை. 18

தொண்டினைக்கூழ்தில்லைச்சிவகாமிக்குத்தாயார்க்குக்
கண்டபெல்லாஞானக்குருபரன்காணம்மானை
கண்டபெல்லாஞானக்குருபரனுமாகில்
அண்டர்பிரானுலைத்தினைப்பட்டாரோவம்மானை
ஆடிப்புலியூராயானதனாற்காணம்மானை. 19

மங்கையுமைபாகவழுவூர்விடைநாதர்
திங்களுடனே கங்கைதினஞ்சுமந்தாரம்மானே
திங்களுடன் கங்கைதினஞ்சுமந்தாராயாகில்
அங்கமெல்லாங்குளிரச்சிபாதகமேதாவமம்மானே
ஆமென்றுபுரியெரித்தணிந்தனைகாணம்மானே. 20

வற்றாதவனையிலும்வாள்விசையன்றன்னையிலும்
பற்றாமலன்னரடிபட்டனர்காணம்மானே
பற்றாமலன்னரடிபட்டனரேயாமாகில்
செற்றாபுரமெரித்தசேவகமேவம்மானே
சேவகத்தைக்கேட்கச்சிரிப்பலவேயம்மானே. 21

ஆதாரமாங்குடந்தையான கும்பநாயகனார்
கோதாருமன்மதனைக்கொண்டெரித்தாரம்மானே
கோதாருமன்மதனைக்கொண்டெரித்தாராமாகில்
மாதாபிதாக்கள்பழிவாங்காரோவம்மானே
வாக்குமுன்னேவாய்தனிலேமண்விழுந்ததம்மானே

தெற்றுநமமாயிருக்குந்தில்லைச்சிற்றம்பலவர்
நற்புலியேழுக்குநகநாயககாணம்மானே
நற்புலியேழுக்குநகநாயகரேயாமாகில்
அற்பவிடப்பெண்ணை மணவதென்னம்மானே
அணைந்தல்லோவுருவமானதுகாணம்மானே

விரிந்தசடைமுடியார்மேலைச்சிதம்பரனார்
வருத்தமுடன்றமக்கொருகால்வாதங்காணம்மானை
வருத்தமுடன்றமக்கொருகால்வாதமேயாமாகில்
பெருத்தவிடந்தனையுண்டுபிழைத்தாரேயம்மானை
பிழைத்தலவோநடமாடப்புறப்பட்டாரம்மானை. 24

பாட்டைப்படித்துப்பயனறியமாட்டாதார்
ஏட்டைப்படித்தோதியெய்தினார்காணம்மானை
ஏட்டைப்படித்தோதியெய்தினரேயாமாகில்
பாட்டின்விதிபின்பயனறியாரம்மானை
பயனறியாவாசிபனரேறுபட்டனர்காணம்மானை. 25

பெற்றபிள்ளைபேரறிந்துபேரிட்டழைபாமன்
மற்றுமொருபேரைவைத்தழைத்தாரம்மானை
மற்றுமொருபேரைவைத்தழைத்தாராமாகில்
பெற்றதகப்பனதுபேரறியாரம்மானை. 26

தெண்டிரைசூழ்தில்லைச்சிவகாமசுந்தரியாள்
மண்டலமீரேழுந்தம்மாதாகாணம்மானை
மண்டலமீரேழுந்தம்மாதாவேயாமாகில்
தண்டிகையேறிச்சிலாகடந்துவந்தென்னம்மானை
தாங்குவதுமேறுவதார்தருவர்தானம்மானை. 27

கல்லாலின்கீழிருக்குங் காளத்தியார்தமைக்காக்கும்,
பொல்லாச் சிலந்தியொன்று பொருந்தினதென் னம்
மானே, பொல்லாச்சிலந்தியொன்று பொருந்தினதே
யாமாகில், வல்லானென்று நண்ணியாகவந்ததுண்டோவம்
மானே, யந்தச்சோழனுடலாய்ப்பெற்றனனம்மானே.

கண்டவர்க்குமுத்திகொடுக்குங்கமலைப்பதிக்கு
மண்டலத்தையுண்டதொருமாமனுண்டோவம்மானே
மண்டலத்தையுண்டதொருமாமனுண்டேயாமாகில்
கொண்டிருக்கும்பெண்ணைக்கொடுப்பார்களோவம்மானே
கோமனுக்கும்பெண்ணைக்கொடுப்பாரோவம்மானே

மாட்டிற்பவனிவருமதுரைக்குநாயகனார்
காட்டிலிருந்தொடித்ததுரோணாசலம்மானே
காட்டில்லிருந்தொடித்ததுரோணாசலனுமாகில்
கூட்டிபதைக்கட்டக்கொடியுண்டோவம்மானே. 30

பாரிற்புகழ்படைத்தபாரமலைச்சிலையன்
வரிகஞ்சயுண்டமதாமகன்காணம்மானே
வாரிஞ்சயுண்டமதாததேயாமாகில்
கூறியநஞ்சநாவொல்லாதோவம்மானே. 31

திக்கடலைமூடித் திக்கிக்கபுரியிச் சாரன்றே
தூங்கவேலைக் கருமைபச்சுட்டனரோ காணம்மானை
தூங்கவேலைக் கருமைபச்சுட்டனரே யாமாகில்
அங்கமெல்லாம் நீலவண்ணமான தென்னேயம்மானை
ஆகாதோ தாயவாலமடக்குநிறைலம்மானை. 32

தேனமருஞ்சோலைத் திருவரங்கத்தெய்ப்பெருமான்
ஆனவர்தா னொருபெண்ணை யிபினாக் காணம்மானை
ஆனவர்தா னொன்பெண்ணை யிபினரே யாமாகில்
ஜானகியைக் கொள்ளுவரோ தாரமாயம்மானை
தாரமாய்க்கொண்டது வஞ்சாபதகாலயம்மானை, 33

திருக்கிளர்விராலிமலைச் செவ்வேலவே நிலைவந்த
குருக்கடலைத் தன்னிலேகட்டினர் காணம்மானை
குருக்கடலைத் தன்னிலேகட்டினரே யாமாகில்
பெருக்கிவர்க்கு மகிபயுண்டோவம்மானை
பெருமையிதுர்மலா பெருமாள் காணம்மானை. 34

எடுத்தபுகழ்ராக்காவ ரேழுலகுந்தானறியப்
படுத்திருந்த கப்பட்டெடுத்ததம்மானை
படுத்திருந்த கப்பட்டெடுத்ததாமாகில்
அடுத்தவிலங்கறகருடனைக்கண்டஞ்சாதோ வம்மானை
அஞ்சலைக்கொண்டல்லோ வயாதிருந்ததம்மானை.

அத்திபுரமெரித்தவாலங்காட்டப்பருக்கு
நெற்றிக்கண்ணென்றநெருப்புகாணம்மானே
நெற்றிக்கண்ணென்றநெருப்புகாணுமாகில்
பற்றிச்சடையிறபடாதோவம்மானே
படருமென்றேகங்கைபெதிவிருந்தாளம்மானே. 36

தேசத்துக்கொப்பாகச்சிதம்பரத்தெற்காக
வாசகத்துக்கேற்றதலமாய்ப்புரமம்மானே
வாசகத்துக்கேற்றதலமாய்ப்புரமாமாகில
காசிக்குப்போனபலன்காணுமோவம்மானே
காவேரிக்கரைகண்டார்க்காணுங்காணம்மானே 37

இருங்கைலாயத்தையும்பெருமயிலுஞ்செம்மயிலும்
முருங்கையிலேயதிமுளைத்ததுகாணம்மானே
முருங்கையிலேயதிமுளைத்ததுகாணுமாகில
பருங்காயாய்க்காய்த்துப்பறிப்பாரோவம்மானே
பறித்தவேலாகொம்படித்துப்பண்ணுகிறாரம்மானே

கோணாரிளமுலைபார்கோதையிடப்பாகனார்
சேணாடர்போற்றுந்திரிபாசர்காணம்மானே
சேணாடர்போற்றுந்திரிபாசரேயாமாகில்
ஏணிமால்பிரமர்கெட்டுவரோவம்மானே
இடமதிக்குழகுசைமதிக்குமெட்டுவரோவம்மானே

கன்னிபசிர்ப்புனலூட வெட்டாற்றேரியவாருக்கும், கன்னிலுபவாயிலுநெருப்பைக்கையிலுமுண்டோவம்மானே, கன்னிலுபவாயிலுநெருப்பைக் கையிலுமுண்டேயாமாகில், எண்ணரியதிருமேனி யசிவுண்டோவம்மானே, எரிந்தலவோ நட்டாற்றி லிருக்கின்றாரம்மானே.

நாடுநகரிற்சிறந்தசம்புநாதற்கிருப்பிடத்தில்
ஒடுஞ்சலமபெருகியூற்றெடுத்ததம்மானே
ஒடுஞ்சலமபெருகியூற்றெடுத்ததாமாகில்
சாடுஞ்சிலநதிபொன்முதலானுண்டோவம்மானே, 41
தலத்திலொருசிலநதிதானுண்டோவம்மானே

சுத்தன்பரட்டன்சுவாமிவடிவேலன்
எந்தனகுலத்திற்கிருளன்காணம்மானே
எந்தனகுலத்திற்கிருளனேயாமாகில்
மத்தன்கிழநகுதெல்லவல்லவனேவம்மானே
வள்ளிக்கொடிக்குப்பூணணகாணம்மானே. 42

செல்வத்திலேசிறந்ததிருக்கடையூராளநம்பி
வில்வமெடுத்தேதக்கற்றுளிர்வருமேவம்மானே
வில்வமெடுத்தேதகுதற தளிர்வருமேயாமாகில்
வில்வளிருட்செல்லாமவீண்போமேவம்மானே
வீண்போகாதேமனேவெளிமுவுதைததாரம்மானே 43

வேதமெடுத்தோதினுந்தோன்றாமெய்ப்பொருளே
பாதமிருக்கும்பரிசறியாயம்மானே
பாதமிருக்கும்பரிசறியாராமாகில்
காதவழியோடிக்கலக்குவதென்னம்மானே
கலங்காயெவ்வுயிருங்கண்ட தலையோவம்மானே.

ஆதிலனிலாகியறிந்துரைக்கமாட்டாதார்
சோதியொளிவதனைச்சொல்லுவரோவம்மானே
சோதியொளிவதனைச்சொல்லுவரேயாமாகில்
சாதிதனைக்குளரிமயக்கருததாலம்மானே
வருந்தாதேதாமாயைபயக்கத்தாலம்மானே. 45

தித்தசன்றன்னைத்திருவாய்பெய்த்தேசிகனை
உற்றபொருடன்னையுண்டறியாரம்மானே
உற்றபொருடன்னையுண்டறியாராமாகில்
அத்தனியனிடமாயாநிலவேனம்மானே
ஆடானேறன்றொழிலிலாடுவனகாணம்மானே. 46

எட்டெழுத்தும்மந்தெழுத்து மேகவெழுத்தோரெழு
த்தும், தொட்டெழுதத்தகாட்டுந் துறையறியாயம்
மானே, தொட்டெழுதக் காட்டுந் துறையறியாரா
மாகில், சுட்டிக்கேட்டுரைக்கும் சொல்லுவதேதம்மா
னே, சொல்லுவாருருவின்றுதொடாததப்பாவம்மானே

சாதிகுலமொன்றுந் தெரிக்கவறிந்தபேதையர்கள்
சாதிகுலமென்னவென்றுதாமறியாரம்மானை
சாதிகுலமென்னவெனறுதாமறிவாராமாயில்
ஆதியந்தகாதமறிவரோவம்மானை
அறியாதவாசிவதேயானவக்காணம்மானை 48

சாத்திரங்கற்றுங்கனியறியமாட்டாதார்
வேர்த்துறக்கவர்தகிதயறியாரம்மானை
வேர்க்கற்கமவர்கவிதமறிவாராமாயில்
சூத்திரத்திற்சூட்சமுறைசொல்லுவரோவம்மானை
சொல்லார்குருவினருடொந்திப்பாரம்மானை. 49

குருவையறியார்குருவினருடாமறிவார்
திருவையெடுத்ததிறமறியாரம்மானை
திருவையெடுத்ததிறமறிவாராமாயில்
மருப்போருமிசாண்டுவகுத்தவகையறியாரம்மானை
வகையறியாவாசியனேருமானைகாணமம்மானை 50

சந்திரனைச்சூரியனைத்தாமறியமாட்டாதார்
அந்தரத்தைப்பார்த்தப்பார்க்கவிலைதன்னம்மானை
அந்தரத்தைப்பார்த்தப்பார்க்கவிலையாமாயில்
சந்திரனொடொன்றுஞ்சரியாராமம்மானை
சரியாவாசசகலகுணந்தரபதிதாரமமானை. 51

வீடுகட்டிவீடெடுத்தவீடிடந்துபோவார்கள்
பாடுபட்டுப்பெற்றபதியறிவாரம்மானை
கூடுவிட்டுப்போயுங்குறிப்பறியாரம்மானே
கூடுவிட்டுப்போயுங்குறிப்பறியாரம்மானே.
குறிப்பறியாமானிடர்கள்குருடர்காணம்மானே 52

எல்லையற்றதோன்றேயிருக்குமிடமறியார்
கல்லையுருவாக்குவித்துக்கைதொழுவாரம்மானே
கல்லையுருவாக்குவித்துக்கைதொழுவாரம்மானை
சொல்லுகேகயிதமாய்ச்சொல்லுமோவம்மானே
சொல்லாதேதனமனதுசொல்லிடுங்காணம்மானே

பின்னைதொண்டுபிதற்றுகின்றபேதையர்கள்
தன்னைதின்றதலமறியாரம்மானே
தன்னைசின்றதலமறியாரம்மானை
பன்னும்பொருளறிந்தபற்றுவரோவம்மானே
பற்றுவாரந்தப்பதியறிந்தோலம்மானே 54

தம்பட்டமேளங்கவின்முரசுமெக்காளம்
தொம்பிட்டசந்தத்தொனிப்பிவாரம்மானே
தொம்பிட்டசந்தத்தொனிப்பிவாரம்மானை
கும்பிட்டுநின்றுகுழைவதெனனம்மானே
குழைவாரொருவனையேகூடவொன்றாரம்மானே.

அன்னைச்சுற்றம்பெண்டுபிள்ளை யானையென்று மிப்
பொருளை, இன்னநிறமின்னகுண மென்றறியாரம்மா
னே இன்னநிறமின்ன குணமென்றறியாராகில
தன்னுருவங்கண்டதிறஞ் சாற்றுவரோவம்மானே
சாற்றுவார்சற்குருவைச்சாந்தக்காலமம்மானே. 56

சித்திரத்தைப்போலு நூலைச்சேர்த்தெடுத்துவைத்
தாலும்,உத்தரத்துக்குத்தரமோங்குமோவம்மானே
உத்தரத்துக்குத்தரமோங்குமேயாமாகில
மற்றுமொருருபவழங்குவதென்னம்மானே
வழங்குவரோமாவடியில்வாழ்ந்திருந்தாரம்மானே. 57

உச்சிதமதியையுமொழிந்தென்பதனுமில்
உச்சிதமதியையுயாரம்மானே
உச்சிதமதியையுபாரறியாராமாகில்
உச்சிதமதியையுண்ணுரோவம்மானே
உண்ணுரோஉட்பொருளையுண்டவர்களம்மானே.

நாமமிடுவார்க்குநடுவேநடுவிடுவர்
நாமமிருக்குநடுவறியாரம்மானே
நாமமிருக்குநடுவறியாராமாகில
நாமமலையுமசைக்கட்டுவரோவம்மானே
காட்டாரோமேலிருந்திகண்டக்காலமம்மானே. 59

மந்திரத்தைக்கற்றுமதியாந் தம்பெறையர்கள்
மந்திரநின்வித்துவகையறியாரம்மானை
மந்திரநின்வித்துவகையறியாராமாகில்
அந்தரத்திலுட்பொருளையறிவரோவம்மானை. 60

பெண்ணறிந்துமாணறிந்தும்பேசும்பொருளறிந்தும்
கண்ணறிந்தவாழ்த்தறியாரம்மானே
கண்ணறிந்தவாழ்த்தனைத்தறியாராமாகில் [னே
பெண்ணிதென்றுமாணிதென்றும்பேசுவதென்னம்மா
பேசும்பொருளறிந்தாரபேசார்காணம்மானே. 91

எட்டெழுத்தேவீடாயினைபந்தநீவினையைப்
பட்டுருவிப்பார்க்கப்பறிசறியாரம்மானே
பட்டுருவிப்பார்க்கப்பறிசறியாராமால்
எட்டெழுத்தையின்றறிபலறியாரம்மானே
இயலறியவாசியன்றேருவெய்துமதுவம்மானே. 62

சித்தாந்தந்தன்னைத்தெளியவறியாதவர்
பெற்றதிருநாமம்பேசுவரோவம்மானே
பெற்றதிருநாமம்பேசவரோயாமாகில
வித்தானவித்தைவிளம்புவரோதம்மானே
விளம்புவார்மெய்ப்பொருளைமேவிநிலயம்மானே. 63

ஐம்பத்தோர்சக்கரத்தையாய்ந்தறியாதார்
கம்பத்தொழிறன்னைக்கண்டறியாரம்மானே
கம்பத்தொழிறன்னைக்கண்டறியாராமாகில்
செம்பொற்பதந்தனையிவர்சேருவரோவம்மானே
சேருந்திருநாமஞ்செப்புவரேயம்மானே. 64

ஆடும்பதியையறிந்துரைக்கமாட்டாதார்
கூடும்பொருளறிந்து கூடுவரோவம்மானே
கூடும்பொருளறிந்துகூடுவரோவாமாகில்
வீடறிந்துகொண்டுவிளம்புவரோவம்மானே
விளம்பாதபேதையர்க்குமெய்வருமோவம்மானே. 65

சந்திரனைக்காணாதேதயங்குகின்றபேதையர்கள்
அந்திப்பகலானதுவேயங்குமின்றதம்மானே
அந்திப்பகலானதுவேயாய்ந்தறியாபேதையர்கள்
மந்திரத்தைக்காணாதேமயங்குவதென்னம்மானே
மயங்குவதுதான்சின்னமாயையாலம்மானே. 66

அருளறிந்துசேர்வைக்கறியாதபேதையர்கள்
பொருளறிந்துசேர்க்கப்பொருந்துவரோவம்மானே
பொருளறிந்துசேர்க்கப்பொருந்துவரேயாமாகில்
இருடனையேநீக்கியிருப்பரோவம்மானே
இருப்பாரனுதினமு மெங்கெங்குமம்மானே 75

வாசிக்குள்ளாகிமயங்குகின்றபேதையர்கள்
வாசிதனைக்கட்டவகையறியாரம்மானே
வாசிதனைக்கட்டவகையறிவாராமாகில்
தேசிகனைக்கண்டுதெரிசிப்பாரம்மானே. 68
தெரிசிப்பார்சித்தர்சிவபத்தரம்மானே

தாயையறியாதார்தகப்பனையுந்தாமறியார்
தாயிருந்தவத்தலமுந்தாமறியாரம்மானே
தாயிருந்தவத்தலமுந்தமறியாராமாகில்
காயமுருவானதைக்கண்டறியாரம்மானே
காமனையுங்காலனையுங்கணக்கறியாரம்மானே. 69

ஒடுக்கமறியாருணர்வுநினைவறியார்
படுக்கையிலேநித்திரையைபார்த்துறங்காரம்மானே
படுக்கையிலேநித்திரையைப்பார்த்துறங்காராமாகில்
எடுத்துரைத்தசாத்திரங்களிறந்தனகாணம்மானே
இறந்துபிறப்பனவுமிருவினைகாணம்மானே. 70

தன்வீடுந்தன்முதலுந்தாமறிந்துவாழாமல்
பின்வீடும்பின்முதலும்பெறுவர்காணம்மானே
பின்வீடும்பின்முதலும்பெறுவரேயாமாகில்
தன்வீடுந்தன்முதலுந்தாமறிந்தாரம்மானே
தாமறிந்தால்வீடுகட்டத்தலமறியாரம்மானே. 71

தன்மமறியார் தவத்தினிலையறியார்
இம்மையிலேமோட்சகதியெய்தவரோவம்மானே
இம்மையிலேமோட்சகதியெய்தவரேயாமாகின்
தன்மமறியாமற்றவிப்பதென்னவம்மானே.

உள்ளதினுள்ளேயொளித்திருக்குமுத்தமனைக்
கள்ளத்திருக்கருத்துக்காண்பாரோவம்மானே
கள்ளத்திருக்கருத்துக்காண்பாரேயாமாகில்
தள்ளப்படாதென்றறிவினை தள்ளுவரோவம்மானே
தள்ளுவார்தாமிருக்குந்தவமறியாரம்மானே. 73

கடையறிந்தவிற்கக்கணக்கறியாமூடர்கடாம்
எடையறிந்தவாணிபத்தையெய்தவரோவம்மானே
எடையறிந்தவாணிபத்தையெய்தவரேயாமாகில்
கடையறிந்துதான்சாக்லைக்கட்டுவரோவம்மானே
கட்டறியாவாசிபன்றேகலங்குவதம்மானே. 74

தில்லையறியார்சிவதலத்தைத்தாமறியார்
எல்லையில்லாப்பேரொளியினெய்தவரோவம்மானே
எல்லையில்லாப்பேரொளியினெய்தாததன்மையன்
கல்லையுருவாக்குவித்துக்கைதொழுதாரம்மானே
கைதொழுதுநிற்பதவுஞ்சற்பனைகாணம்மானே. 75

இறந்தபிறப்பவற்குயெத்தனை தான்சொன்னாலும்
மறந்தழிந்துபோனவர்க்குமதிவருமோவம்மானே
மறந்தழிந்துபோனவற்குமதிவருமேயாமாகில்
பிறந்தமதியிருந்ததும்பிரப்பறியாரம்மானே
பிறப்பறியார்குலமபறித்துப்போவதென்னம்மானே.

தன்னையறியார்தலைவனையும்தானறியார்
பின்னைகுருபீடமென்றுபேசுவரோவம்மானே
பின்னைகுருபீடமென்றுபேசுவரேயாமாகில்
தன்னையறியாதகுருசாதிகுருவம்மானே. 77

உள்ளும்புறம்புமொருசமயமாயிருக்கக்
கள்ளாறுசமயங்கண்டதுண்டோவம்மானே
கள்ளாறுசமயங்கண்டதுண்டேயாமாகில்
கொள்ளுந்தொழிலைகுலம்பிரித்தாரம்மானே
பிறந்தகுலம்பிரித்தும் பேசுவரோவம்மானே. 78

வீட்டுவிளக்கதைவிளக்கியறியாமல்
காட்டுவிளக்கையொன்றதைதொழுத ரம்மானே
காட்டுவிளக்கையொன்றதைதொழுதாராமாகின்
கூட்டுவிளக்கைக்குறிப்பறியாரம்மானே
குறிப்பறியமானிடர்கள் குருடர்களம்மானே. 79

நாட்டி லுள்ள கல்லையெல்லா நன்றாகவே திரட்டிக்
கூட்டி யுருவாக்குவித்துக் குருவறியா ரம்மானே
கூட்டி யுருவாக்குவித்துக் குருவறியா ராமாகில் [மானே
எட்டி லுள்ள பாட்டையெல்லா மெடுத்துரைத்தாராம்
எடுத்துரைத்தார் பயனற்றுலெய்துவரோ வம்மானே.

தன்னுருவி னின்றுதயங்குகின்ற சிவனைத்தான்
இன்னவுருவின்னநிறமென் றறியா ரம்மானே
இன்னவுருவின்னநிறமென் றறியாராகின்
தன்னுருவிற் பாய்ந்தவுயிர் தாமறியா ரம்மானே
தாமறியாற் சித்தர் தானறியா ரம்மானே. 81

மூக்கானுங் காகமுமூழ்கிக் குளித்தாலும்
கொக்காகியிக் குலத்திற் கூடுமோ வம்மானே
கொக்காகியிக் குலத்திற் கூடுமேயாமாகில்
இக்காலமிப்புவியி லிறப்பதுவென்னம்மானே
இறவா திருக்குமிட மறியா ரம்மானே. 82

இருளையிருள் விழுங்கியீ ரறிவுமோ ரறிவாய்ப்
பொருளைவிழுங்கும் பொருளறியா ரம்மானே
பொருளைவிழுங்கும் பொருளறியா ராமாகில்
இருடனக்குள்ளே யிருப்பதுவென்னம்மானே
இருளுமதை நீக்கியிருப்பதுவென்னம்மானே. 83

வெண்ணீறிடுவார்விழுவார்விதம்விதமாய்
வெண்ணீறுபூத்தவிதமறியாரம்மானை
வெண்ணீறுபூத்தவிதமறியாரமாகில்
மண்ணீறிருக்கும்வகையறியாரம்மானை
வகையறியவாசியல்லோமயங்குவதுமமமானை. 84

தந்தைக்குமுன்பிறந்துதகப்பனுக்குபோதகத்தை
அந்தமுதற்றான்கடந்தேயறிவித்தாரம்மானை
அந்தமுதற்றான்கடந்தேயறிவித்தாராமாகில்
தந்தையிடமாகவல்லோதாமிருந்தாரம்மானை
தாமிருந்துமப்பொருளைத்தாமறியாரம்மானை. 85

பிறந்தவுடலைவிட்டுப்பும்போனசிவனைத்தான்
உறங்குதென்றசொல்லவுறக்கமுண்டோவம்மானை
உறங்குதென்றசொல்லவுறக்கமுண்டேயாமாகில்
உறக்கமுமற்றேயோடுதுகாணம்மானை
ஓடுமென்றசிவனுக்கேயுணர்படுவாரம்மானை. 86

கட்டாணிமுத்துக்கயற்கண்ணிபங்கிலுறை
அட்டாலைச்சொக்கருக்கேயாறுசிரசம்மானை
அட்டாலைச்சொக்கருக்கேயாறுசிரசாமாகில
எட்டாதவெள்ளமிழுக்குமோவம்மானை
இழுக்கும்பெருங்கரையிலிருப்பவரையம்மானை. 87

ஆயன்கடைகடைக்கவம்பலமுமாயிருக்க
மாயமாயாடெடுத்தமகதேவரம்மானே
மாயமாயாடெடுத்தமகதேவராமாகில்
ஆயனுஞ்சற்றேயறிவாரோவம்மானே
அறிந்தல்லோநித்திரைக்கண்ணுனர்காணம்மானே.

குற்றமில்லாச்சங்கரனுர்கோயிலுக்குள்ளேயிருவர்
புற்றுமண்ணையிந்தபொருள்பறித்தாரம்மானே
புற்றுமண்ணையிந்தபொருள்பறித்தாராமாகில்
சற்றுமண்மீதிற்றுனில்லையோவம்மானே
இல்லையென்றபேர்க்கீசனில்லைகாணம்மானே. 89

பொய்யுங்களவும்புலையுந்தவிராதார்
பொய்யுங்களவும்புலைதவிர்த்தாராமாகில்
மெய்யென்றெடுத்துத்தணைமேவுவரோவம்மானே
மேவுவரோநின்றநிலைமேவினுலம்மானே. 90

கோரஞ்சிறுக்குநிலையறியமாட்டாதார்
பாரஞ்சிறுக்கும்பதியறியாரம்மானே
பாரஞ்சிறுக்கும்பதியறிவாராமாகில்
வீரஞ்சிறுத்துவிரைவுவரோவம்மானே
விரைபாலநபூதிவிதத்தினுலம்மானே. 91

ஆங்காரயச்சமற்றறியாதமூடர்கண்மெய்
நீங்காதிருக்குநிலையறியாரம்மானே
நீங்காதிருக்குநிலையறிவாராமாகில்
போங்காலமானபொருளறியாரம்மானே [மானே.
பொருளறியாப்பொய்க்குருவைப்போற்றுவதென்னம்

இடமறிந்துகொண்டேயிருக்கறியாப்பேதையர்கள்
சடமறிந்தவாழ்ந்தடமறியாரம்மானே
சடமறிந்தவாழ்ந்தடமறியாராமாகில்
சடந்தனிலேசற்குருவைத்தாமறியாரம்மானே
தாமறியாத்தலைவனையுந்தானறிந்தாரம்மானே. 93

சற்குருவிஞ்ஞானத்திற்சரியாகவேயிருந்து
தர்க்கமிடுமூடருக்குத்தவமவருமோவம்மானே
தர்க்கமிடுமூடருக்குத்தவம்வருமேயாமாகில்
இப்புவியிலேராகமெய்துவதென்னம்மானே
எழுகாலின்கீழிருந்தவர்காணம்மானே 94

அந்தபசும்பொற்கிரிவாழாதிசத்திரதரவர்
வந்தபுலித்தோலுரித்தவல்லாளரம்மானே
வந்தபுலித்தோலுரித்தவல்லாளராமாகில்
இந்தமலைமேலிருப்பதென்னவம்மானே
இந்தார் மலைபன்மகளின்பத்தாலம்மானே 95

மூவர் அம்மானை முற்றிற்று.

புத்தகவிளம்பரம்.

கலமானவர்களுக்கும்தெரிவித்துக்கொள்
.னில்! அடியில்கண்ட புஸ்தகங்கள் அச்சிட்டு
தயா. ர் இருக்கிறபடியால் வேண்டியவர்கள் நேரிலும்,
வி. பி. போஸ்டு மூலமாகவும் பெற்றுக்கொள்ளவும்.

சந்திரகாசநாடகம் 64-படங்களமைந்தது		விலை	1-4-0
வாணாசுரநாடகம்	1-க்கு	,,	1-4-0
கோமளவல்லிகல்யாணப்புத்தகம்	1-க்கு	,,	0-8-0
ஸ்ரீவால்மீகராமாயணக்கும்மி	1-க்கு	,,	0-8-0
ஸ்ரீசங்கரகுருசரித்திரம்	1-க்கு	,,	0-4-0
மார்க்கண்டேயர்சரித்திரம்	1-க்கு	,,	0-3=0
பெரியகல்யாணக்கும்மி	1-க்கு	,,	0-2-0
கல்யாணபோஜனசம்பிரதாயகும்மி	1-க்கு	,,	0-2-0
சுபத்திரைகல்யாணசரித்திரகும்மி	1-க்கு	,,	0-2-0
தாயுமானவர்சரித்திரம்	1-க்கு	,,	0-2-0
குசேலர்சரித்திரக்கும்மி	1-க்கு	,,	0-2-0
அம்பரீஷன்சரித்திரக்கும்மி	1-க்கு	,,	0-2-0
நலுங்குபத்தியம்	1-க்கு	,,	0-2-0
லாலிஊஞ்சல்	1-க்கு	,,	0-2-0

எமது விலாசம்.

P. M. N. &. BROTHER
பு. இராஜு நாயுடு அவர்களது,
சங்கநிதி விளக்கம் பிரஸ்,
ஜீனா மதராஸ்,